SUPPLEMENT TO THE CATHOLIC GUARDIAN

# சத்தியவேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

Telegram : "GUARDIAN" JAFFNA. Telephone : No. 100.

வெள்ளிக்கிழமைதோறும் பிரசுரமாகும்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

70-ம் புத்தகம் 16-ம் இல. யாழ்ப்பாணம் 1945-ம் ஆண்டு வைகாசிமாசம் 4-ந்திகதி வெள்ளிக்கிழமை—பிரதி சதம் 5.

## ஓ! மன்னாரே உன்மகிமையே மகிமை!

புராதனத்திலே சீருஞ்சிறப்பும்,பேரும் புகழும் படைத்திருந்த எம் மன்னார்ப் பதியிலே அதிகப்பற்றுன மக்களால் அனுசரிக்கப்பெற்றுவரும் திருவேதமாகிய கத்தோலிக்கசமயம் எக்காலமும் பெருமை பாராட்டத்தக்க சம்பவமொன்ருலே பெருமிதங்கொள்ளுகின்றது. அச்சம்பவம் யாதெனில்: இங்கே அறுநூற்றுக்கதிகமான கத்தோலிக்கமக்கள் தமது செங்குருதியைச்சிந்தி வேதசாட்சிகளாயினமையே. சென்ற சித்திரைத்திங்கள் 22-ந் தினமன்று மன்னார் ஓர் மாநகரமாகவே காட்சியளித்தது. முன்னொருகாலமும் மன்னார் மாத்திரமல்ல, இலங்கைதானும் கண்டிராத பயங்கரகோலத்தை நானூருண்டுகளின்முன் அரக்கஉருக்கொண்ட சங்கிலியனின் உருக்குக் கைவாளால்அது கண்டது. அன்று வேதசாட்சிகளின் பிணக்குவியலாலும், இரத்தவெள்ளத்தாலும் தேங்கிய மன்னாரானது, இன்று மகிமையின் சின்னமாக விளங்குகின்றது. அவ்வேதசாட்சிகளின் நாட்டிலுதித்த மன்னார் வீரமக்கள் அவர்கள்காட்டிய வீரத்துவத்தை ஒரே ஆர்ப்பரிப்புடன் கொண்டாடுகின்ருர்கள். [illegible]வாதிதேவனேடு தேவலோகத்தில் வீற்றிருந்து தங்களைக் கண்ணேக்கும் மூதாதைகளை மகிமைப்படுத்துகிருர்கள். இந்த மனேகரகாட்சியின் சிறப்பைச் சென்றசித்திரைத்திங்கள் 22-ம் நாள் பார்க்கக்கொடுத்துவைத்த கண்களே கண்கள். அதற்கு உதவிபுரிய முன்வந்த கரங்களே கரங்கள். அதற்காகப் பாடுபட்ட புயங்களே புயங்கள்.

ஓ! மன்னாரே உன்மகிமையே மகிமை. முதனுள் 21-ந்தேதிமாலை மன்னார்ப்பகுதி மக்கள் பெருந்திரளாகப் பாலத்தடியில் கூடிநிற்கிருர்கள். பாண்டுவாத்திய கோஷ்டியார் தங்கள் வாத்தியக்கருவிகளைச் சித்தஞ்செய்கிருர்கள். பட்டுக்குடைகள் வரிசை வரிசையாய் நிற்கின்றன. யுத்தவீரர் தங்கள் துப்பாக்கிகளுடன் அணிவகுத்து அழகுசெய்கிருர்கள். மன்னார் உபஏசன்றுத்துரையுடைய கையிலொன்றும், தம் புத்தத்துவகாரர் அவர்களுடைய கையிலொன்றுமாக இருமாலைகள்ஆயத்தமாகின்றன. காரின் சப்தம் கேட்கின்றது. பீரங்கிகள் வெடிதீருகின்றன. காரினின்றும் ஊதாநிற உடையணிந்த இருஉருவங்கள் இறங்குகின்றன. கழுத்தில் மாலைகள்விழ, பாண்டுவாத்தியம் கோஷிக்க, சமுகமாயிருந்த மக்களெல்லாம் இராசகுரவர்களை அழைத்துச்செல்கின்ருர்கள். மன்னார் ஏசன்றுத்துரை வளவில் அமைத்திருந்த உயராசனத்தில் முதன்முறையாக அவர்கள் வரவேற்பளிக்கப்பெற்றுச் சமாகம பந்தருக்கு அழைத்துச்செல்லப்படுகிருர்கள். பந்தர் முற்றத்திலே ஆண்களும் பெண்களுமாகப் பல்லாயிரஞ்சனங்கள் அணிவகுத்துநின்ற அலங்காரக் காட்சியூடேசென்று பந்தரின் உயராசனத்தில் அமருகிருர்கள். சிறுமிகளால் பூச்செண்டுகள்அணிந்து, பலஊர்ப் பிரமுகர்களால் பன்னீர் தெளிக்கப்பட்டுச் சமாகமத் தலைவர் சுவாமியாரால் மன்னார்ப்பதிமக்களின் சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டபின் இராசவாசமுதலியார் முத்துத்தம்பி அவர்களால் சோபனபத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டதும் மகாவந். கியோமார் ஆண்டவரால் ஆசிர்வாதம் அருளப்பட்டதோடு அன்றைய கொண்டாட்டம் முடிவுற்றது.

அடுத்தநாளாகிய ஆதவவாரத்தில் இளங்கதிர் தளிர்த்துவரும் வெய்யோனின் கொடுங்கிரணத்திற்கஞ்சி காலை 6. 30 மணிக்கு மேற்றிராணிஆண்டவரால் நிறைவேற்றப்பட்ட பாடற்பூசைக்கு மன்னார்-மாதோட்டவாசிகளும், யாழ்ப்பாணம் மட்டக்களப்பு திரிகோணமலை கொழும்பு முதலாந் தூரவிடங்களிலிருந்து வந்தவர்களுமாய் 6,000 சனங்கள்கூடியிருந்தனர் பூசையின்போது வண. பீற்றர் சுவாமியாரால் "தாயின் அன்பு" எனும் விஷயம் பற்றி அருட்சியான ஓர் பிரசங்கம் ஒலிபரப்பிமூலம் செய்யப்பட்டது. பின்னர் அன்று சாயந்தரம் 6 மணியளவில் பள்ளிமுனைப் பந்தரில் கூடிநின்ற பெருந்தொகையான குருமாரும் சந்நியாசிகளும் கன்னியாஸ்திரிகளும் வரிசை வரிசையாய் முன்செல்ல மேற்றிராணியாண்டவர் சற்பிரசாதநாதரைக் கையிலேந்தி அலங்காரமாய்ச் சித்தஞ்செய்யப்பட்ட தேரில் அமர்ந்ததும் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாயிற்று. தேரின்முன்புறமாகத்தூத்துக்குடி மேற்றிராணிஆண்டவர் சென்றமையானது அந்நாளில் இந்தியாவிலிருந்துவந்த குருவானவர் ஞானதீட்சை கொடுத்ததையும், அர்ச். பிராஞ்சீஸ் சவேரியார் வேதசாட்சிகளின் இரத்தம்சுவறியதீவை முத்திசெய்ததையும் ஞாபகமூட்டும் காட்சியாகவிருந்தது. பாடகர்குழாமின் மத்தியிலிருந்து இசைக்கும் பாடற்தொனியானது மன்னார் வேதசாட்சிகள் மோட்சத்திலிருந்து ஆண்டவரின் மகிமையைப்பாடும் ஆனந்த ஆர்ப்பரிப்பாகவும், மலர்தூவும் சிறுவர்குழாம் தேவதூதர்கள் ஆனந்தபாஷ்பம் சொரிவதுபோலும் இருந்ததோடு அன்று கிறீஸ்து இராசாவை அவமானப்படுத்தும் பயங்கரநோக்காகப் பாவிக்கப்பட்ட சிப்பாய்களின் வாள்களுக்குமாருக இன்று நூற்றுக்கணக்கான யுத்தவீரரின் துப்பாக்கிகளோடு அணைந்தவாள்கள் ஆண்டவர் அமர்ந்ததேரை ஆசாரமாகப் புடைசூழ்ந்து மகிமைப்படுத்திய அலங்கார காட்சிதான் ஆ! என்ன மாட்சி?

ஓ! மன்னாரே! உன் மகிமையே மகிமை. ஆண்டவர் எழுந்தருளிய மன்னார் வீதிகளில் மேஸ்திரியார் மாணிக்கத்தம்பி அவர்களின் கையோட்டங்கள் காட்டும் அலங்காரப்பந்தர்கள்தான் எத்தனை. வானத்தை ஊடுருவித்தாவும் சிகரங்களின் காட்சிதான் என்னே! வெண்முகில்கள் படர்ந்தடர்ந்ததுபோல வெண்ணிறக் கடுதாசிகளின் வேலைப்பாடுகள் தான் என்னே. யுத்த பயங்கரத்தில், யுத்தபஞ்சத்தில், யுத்தகஷ்டத்தில் மூழ்கிக்கிடக்கும் உலகமத்தியில் வசிக்கும் மன்னார் மக்களுக்கு இத்துணிவு வந்ததுதான் எப்படி? இக்காரியத்தைச் சீராகநடத்திமுடிப்போமென்ற நம்பிக்கைதான் வந்தவழியென்ன? யுத்தபயங்கரத்தில் தத்தளித்தாலும் விசுவாச தைரியத்தின் சோபித காட்சியல்லவா இச்சமாகமக்காட்சி!

இரவு 9 மணியளவில் தேர் சமாகமபந்தரை யடைந்ததும் மேற்றிராணியாண்டவர் சற்பிரசாதநாதரைக் கொணர்ந்து சமாகமப்பந்தரில் அலங்காரமாய் அமைக்கப்பட்ட அடுத்தாரில் எழுந்தருளச்செய்து தூபதீபங் காட்டியபின் மகாவந். ரேச் ஆண்டவரவர்கள் ஒலிபரப்பியின் முன்னின்று நம்மினிய தமிழில்செய்த பிரசங்கத்தின் அலங்காரந்தானென்னே! அதன்பின் மேற்றிராணிஆண்டவரவர்களின் ஆசீர்வாதத்துடன் சமாகமம் சிறப்பாக முடிவுற்றது. ஓ! மன்னாரே உன் மகிமைதான் என்னே! இரு மேற்றிராணிமார்களோடு சமாகமச்சிறப்பைக்கண்ட உன் கண்களின் மகிமைதானென்னே. சற்பிரசாதநாதர் யுத்தவீரரால் ஆசாரமாகப் புடைசூழ்ந்து அணிவகுத்துநடத்தப்பட்டஅலங்காரகாட்சியின் மகிமைதான் என்னே. இவ்வளவையும் சிறப்பாக நடத்துவதற்கு அயராதுழைத்த தலைவரும், கூட்டக்காரியதரிசிகளும் வாழ்க! மன்னார்க் கத்தோலிக்க மக்களே பல்லாண்டு வாழ்க!

M. D. R.

---

—ஜேர்மனியராலே செலுத்திவிடப்பட்ட ஆகாயவாணக் குண்டுகளில் எல்லாமாகப் பிரித்தானிய இராச்சியத்தில்போய் விழுந்தவைகள் 1,050 [illegible] ருலே பிரித்தானிய மக்களில் 2,754 பேர் கொல்லப்பட 6,500 பேருக்குமேல் கடினகாயம் அடைந்திருக்கிருர்கள்.

## பத்திமாவில் தேவதாயாரின் காட்சிகள்

[இந்திய கத்தோலிக்க வேதவிருத்திச்சங்கத்தின் பிரசுரமொன்றிலிருந்து இசைத்து எழுதியது]

(சூ. அ.)

### ஆரம்ப உரை

1917-ம்ஆண்டு வைகாசிமாசம் 13-ந் திகதி தொடக்கம் ஐப்பசிமாசம் 13-ந் திகதி உள்படப் போத்துக்கால்தேய பத்திமா என்ற பதியிலே தேவதாயார் மூன்று சிறுபிள்ளைகளுக்கு அருளிய ஆறு காட்சிகளைப்பற்றியும், அவைகளிலிருந்து கிறீஸ்தவர்களாகிய நாம் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பனைகளைப்பற்றியும் சில எழுதவேண்டுமென்று ஓர் தபோதனரால் ஏவப்பட்டேன். அந்த ஏவுதலுக்கு இசைந்து பின்வருவனவற்றை என் சகோதர கிறீஸ்தவர்களுக்கு எழுத எத்தனித்தேன்.

காட்சிகளை விபரிக்குமுன் அவைகளைச் சார்ந்த சில குறிப்புரைகளை எழுதுவது உசிதமாகுமென எண்ணுகின்றேன். பூவுலகின் தற்காலநிலைமையை நோக்கும்பொழுது மனம்வாடுகின்றது. நரகசாத்தானும், அவனல் அனுப்பப்பட்ட அநேகரும் தற்காலத்திலே மனுக்குலத்தை அதன் ஏககதியாகிய தேவனிலிருந்து பிரித்துவிடும்படியாக நாஸ்திகம், சமதர்மம் முதலிய தப்பறையான கொள்கைகளை மனிதர்மத்தியில் பரப்பக் கங்கணங்கட்டி நிற்கின்ருர்கள். இவைகளோ பழையஏற்பாட்டிலே சொல்லப்பட்ட சலப்பிரளயத்திலும்பார்க்க மானிடசென்மத்துக்கு அதிகமானகேட்டை விளைக்கக்கூடிய பயங்கரமான ஆபத்துக்களேயாம், இவைகள் பெரியவோர் கொள்ளைநோய்போல் உலகமெங்கும்பரந்து மனிதருடைய அழியாத ஆத்துமாக்களை நரகத்துக்கு இழுத்துச் செல்லுகின்றன. இப்பூவுலகத்தைப் பாழுலகமே ஆக்கமுயலுகின்றன. உலகம் இந்தப் பாரியஆபத்துக்குத் தப்பவேண்டுமானல், நமது இரட்சகர் எங்கட்கு உதவியிருக்கும்—என்றைக்கும் ஜெயந்தரும் இரு இரட்சணிய ஆயுதங்களை நாம் தக்கவிதமாகப் பாவிக்கவேண்டும். அவைகளுள் முதல்ஆயுதம் திவ்விய பூசைப்பலி. இரண்டாம் ஆயுதம் பரிசுத்த செபமாலை.

எவ்விதமான அகோரசோதனைகளையும் விலக்கவும், எவ்வித பயங்கரமான ஆபத்துக்களில்நின்றும் எம்மைக்காக்கவும் எமது இரட்சகர் எம்முடன் என்றும் இருக்கின்ருர். உலகமுடிவுபரியந்தம் உங்களுடன் நாம் இருப்போம் என்று திருவுளம்பற்றிய அவரதுவாக்கு ஒருபோதும் அழியவோ தவறவோமாட்டாது. வானமும் பூமியும் அழிந்தாலும் எனதுவாக்கு அழியாது என்று அவர் திருவாய்மலர்ந்தருளினுரே. அவருடைய காருண்ணிய தயையும், வரம்பில்லாத வல்லமையும் அல்லவோ நமது கேடையம். நாம் தக்கவிதமாய் அவைகளைக் கையாடாமையே நமது பாரிய மதியீனம். அவர் சகல ஆபத்துக்களிலும் எங்கள்தஞ்சமாகத் தமதுதாயாரை எமது தாயாராகத் தந்திருக்கிருர் என்றதை அநேகர் மறந்துவிடுகிருர்கள். திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட நாட்தொடக்கம் இன்றுவரைக்கும் ஆபத்துநிறைந்த வேளைகளிலெல்லாம் தேவதாயார் தமது தயவான காட்சியைஅளித்து விசேஷவிதமாகக் கிறீஸ்தவர்களைக்காத்துப் பரிபாலித்ததைத் திருச்சபைச் சரித்திரத்திலே இலகுவாக வாசித்து அறியலாம்.

எழுநூறு ஆண்டுகளின்முன் "அல்பிஷென்சியன்ஸ்" என்ற வேதவிரோதிகள் இதோ சத்தியதிருச்சபையை வேருடன் களைந்து அழிக்கிரேமென்று எழுந்தபொழுது, தேவதாயார் அர்ச். சாமிநாதருக்குக் காட்சியளித்துச் செபமாலை என்னும் ஜெபமாலையை அவர்கரத்தில் ஆயுதமாக வைத்து, அதன்மூலமாகத் திருச்சபைக்குப் பூரணவெற்றி பெற்றுக்கொடுத்தார். முன்னூறு வருடங்களின்முன் இதோ கிறீஸ்தஉலகத்தைத் தவிடுபொடியாக்குகிரேமென்று முனைந்த துருக்கிய கப்பற்படையை முறியஅடித்தது பரிசுத்த செபமாலையல்லவா? ஐந்தாம் பத்திநாதராகிய பரிசுத்த பாப்பானவரின் ஏவுதலின்படி சத்தியதிருச்சபை செபமாலையைஓதித் தேவனின் இரக்கத்தை வேண்டிநின்றது. இறுமாப்புடன் புறப்பட்டுவந்த துருக்கிய கப்பற்படை லெப்பான்ரோக்கடலிலே கிறீஸ்தவபடையினுல் முறியஅடிக்கப்பட்டு ஆழிவாய்ப்பட்டது. 1716-ம்ஆண்டு மகமதியர் யுத்தசன்னதராய் ஐரோப்பாவுள் புகுந்து, வியென்ன நகரமட்டும் ஒரேவெற்றியாகப்போர்க்கறைகூவிச்சென்றனர். செபமாலை மறுபடியும் அந்தச்சத்துராதிகளைக் காற்றின்முன் தூசிபோல் பறக்கவைத்தது

இவ்விதமாகவே உலகம் தேவவழிபாட்டை மறந்து, நிர்ப்பாக்கியநிலையை அடைந்து, சருவேசுரனுடைய கோபத்துக்கும் சாபத்துக்கும் இலக்காயிருந்த பலகாலங்களிலும் எங்கள் மாதா தமது கிருபைநிறைந்த காட்சிஅளித்து, மனிதர் யாவரும் மனந்திரும்பித்தேவஇரக்கத்தை அடையும்படி ஆவலுடன் அவர்கட்குப் புத்திபுகட்டியிருக்கிருர். லூர்து மாகெபியிலே அர்ச். பெர்னதெத் அம்மாளுக்கு மோட்சராக்கினி அளித்த காட்சிகளைப் பற்றி ஏறக்குறைய எல்லாக் கத்தோலிக்க மக்களும் அறிவார்கள். லூர்துகெபியுள்ள பிராஞ்சுதேயத்திலே பொண்மேன் என்னும் இடத்திலும் மாதா காட்சிஅளித்தார். செபமாலையை ஓதுங்கள்; செபமாலையை ஓதித் தேவஇரக்கத்தை வேண்டுங்கள்; மனந்திரும்புங்கள்என்பதே தேவதாயார் அந்தவேளைகளில்எல்லாம் மனிதருக்குச்சொன்ன புத்திமதியாகும்.

ஐயையோ! உலகம் பாழ்பட்டு, அழிவையே தன்மேல் கூவியிழுக்கும் இக்காலத்திலும் தேவதாயார் தாய்க்குரியஅன்புடன் கருணைசொரிந்து எங்களைநோக்கி, வரப்போகும் பெரிய ஆபத்துக்களிலிருந்து நாம் எம்மை மீட்டுக்கொள்ளும் வழியைத் துலாம்பரமாய் எமக்குக் காண்பிக்கச் சித்தமாகின்ருர். தயவும் இரக்கமும் நிறைந்த தமதுஅழைப்புக்குச் செவிசாய்க்கும்படி எம்மை அழைக்கின்ருர். இந்த அழைப்புக்குச் செவிகொடாதுவிடுவது எவ்வளவு மதியீனம்! மனுக்குலத்தை அதன் பரிதாபத்துக்குரிய நிர்ப்பாக்கிய நிலைமையில்நின்று விடுதலையாக்கிப் பரலோகபாதையில் அதை மறுபடியும் சேமமாய் நடத்தும்பொருட்டே பத்திமாஎன்ற புரியிலும் அவர் ஆறு காட்சிகளை அளித்தார். அவைகளைப்பற்றிய விபரங்களை மறுமுறை வரைவேன்.

---

### யப்பானின் நிலைமை யாது?

யப்பானில் ஏழுவருடமும், பின்னர் மஞ்சூக்கோவிலும் போர்மோசாவிலும் நான்கு வருடமும் கட்டுப்பாடின்றிச் சஞ்சரித்திருந்து சமீபத்திலே ருஷியாவழியாகச் சுவீடனுக்குத்திரும்பிய ஸ்பானிய மிஷனரி ஒருவர் யாதுசொல்லுகின்ருர்? யப்பான் திடீரென வீழ்ச்சியடையமாட்டாதென்பது முதலாவதாக அவர் கொண்டுள்ள திறம்பாத அபிப்பிராயம். அப்போது எவராலும் வெல்லமுடியாத ஜேர்மனியின் ஆகாயப்படைகொண்டு பிரித்தானியை வெற்றிகொள்ள முடியாமற்போனவாறே யப்பானையும்ஐக்கிய ஆகாயப்படைகள் வெற்றிகொள்ள முடியாதென்பது யப்பானியரின் கருத்து. யப்பானியரைப் பசிபட்டினிபோட்டுச் சரணுகதியடையச்செய்வது முடியாது. யப்பானில் கப்பற்சேதம் மிகப்பெரிதாகி அதனைப் பெரிதும் பாதிக்கத் தலைப்பட்டுவிட்டது. கப்பல்கள் கட்டுவதற்கும், யுத்ததளவாடங்கள் செய்வதற்கும் தேவையான இரும்பு, உருக்கு யப்பானிடம் ஏராளமாய் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமடங்குதொகைப்பணமும்
பலவீனராய்ப் போனவர்கட்கு
உபகாரப்பணமுமாகிய
இவ்விரு அஷ்யூரன்ஸ் பொலிசிகளுமே

**"ரிறஸ்ற்"**

**கம்பெனியின் விசேஷித்த சுதந்தரங்களாகும்**

மாண உரிமைக்கு இருமடங்கு தொகைப்பணம் கிடைக்கும்படி உத்தரவாதப் பொறுப்பளிக்கும் விசேஷித்த சுதந்தரத்துக்கு இலங்கையின் இது காலவரைச் சரித்திரத்தில் நாங்களே முதன்முதலாகப் பங்காளிகளாகின்றோம்.

உமது சீவியத்தை
"ரிறஸ்ற்" வீமாக்கம்பெனியிலே
வீமாச்செய்வித்துக்கொள்ளுக
ஏனென்றால்

இலாபகரமான பொலிசி நிபந்தனைகளுடன் பிணைஉத்தரவாதமும் அதிநுட்பமான சாவதானமுமே இக்கம்பெனியின் விசேஷ குணங்களாகும்.

பலதிறப்பட்டதாய்ப் பொலிசி நிபந்தனைகள் சித்தஞ்செய்யப்பெற்றுளதாதலால் ஒவ்வொருவரும் தத்தம் தாரதரத்துக்கேற்றதைத் தெரிந்துகொள்ளலாம்.

"ரிறஸ்ற்" கம்பெனி லிமிற்றெட்
தபாற்பெட்டி 208
83 சதாம்வீதி, கொழும்பு

விபரமறிய விரும்புவோர் பின்வரும் விலாசத்துக்குஎழுதவும்

திரு. எல். எஸ். இராசநாயகம்
"ரிறஸ்ற்" ஏசென்ற்
13, சவிரிமுத்து முதலியார் றோட்டு
யாழ்ப்பாணம்



# சத்தியவேத பாதுகாவலன்

**1945-ம் ஆண்டு**
**வைகாசிமாசம் 4-ந் திகதி**


## யுத்தநிலை

ஐரோப்பிய யுத்தத்தின் சிவநாடி முற்றாக வீழ்ந்துவிட்டது. அதனால் இன்றோ அல்லது இன்னுஞ் சிலதினங்களிலோ அது முடிவாகிவிடுமென்று நிச்சயமாக நம்பியிருக்கலாம். இந்த யுத்தத்தின் ஆதிகாரணராயிருந்தவரும் நாஸியஜேர்மனியிலே கடந்தபன்னிரு ஆண்டுகளாக ஆதிக்கம்வகித்து இடுதண்டம் பிடிதண்டமெனச் சர்வாதிகாரம் செலுத்திவந்தவருமான ஹிற்லரும் இம்மாசம் 1-ந்திகதி செவ்வாய்க்கிழமை யமலோகம் சென்றுவிட்டனர். அங்ஙனம் பிரிந்து அவர்செல்லுமுன் தனது இடமாக ஜேர்ம்னியின் புதிய சர்வாதிகாரியாக நியமித்துவிட்டுப்போன ஜேர்மன்கடற்படையின் மாஜி பிரதமதளபதியாகிய அட்மிறல் டோனிற்ஸ் என்பவர் அதிகாரபதவியைக் கையேற்றதும் ஜேர்மன் சேனைகளுக்கு விடுத்த செய்தியிலே, யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துமாறு ஆஞ்ஞாபித்தனர். ஆனால் இவரின் ஆஞ்ஞாபனையைப் பறவாய் பண்ணாது வடஇத்தாலியிலே யுத்தத்தில் ஈடுபட்டுநின்ற ஜேர்மன்சேனைகள் அந்தரங்கமாக உடன்படிக்கைப்பேச்சுகள் நடத்திவந்து கடைசியாகச் சென்ற 2-ந்திகதி புதன்கிழமை உருமத்தின்போது தங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்து யாதாமோர் நிபந்தனையுமில்லாமலே ஐக்கியசேனைகளிடம் சரணடைந்துவிட்டன. இச்சேனைகளிலே ஏறக்குறையப் பத்துலட்சம் ஜேர்மனிய போர்வீரர் அடங்கியிருந்தார்கள். இது செய்தி றோமைநகரில் காட்டுத்தீபோல் பரக்கவே அங்கிருந்த பிரித்தானிய, அமெரிக்க போர்வீரர்கள் கூட்டங்கூட்டமாக வீதிசுற்றி பாட்டுகள்பாடி ஆர்ப்பரித்தார்கள். இத்தாலியமக்கள் புன்னகைபூத்துநின்றார்கள். 1943-ம்ஆண்டு மொண்கோமெறி அவர்கள் தலைமையிலே ஐக்கியசேனைகள் தென்பகுதியில் சலேர்னோ எனுமிடத்தில் படையெடுத்தபோது இத்தாலியில் ஆரம்பமான யுத்தம் சென்ற 2-ந்திகதியுடன் முற்றுப்பெற்றது. இந்த மகாயுத்தத்திலே இத்தாலியிற்றான் ஜேர்மன்சேனைகள் யாதாமோர்நிபந்தனையுமில்லாது முதன்முதலாகச் சரணடைந்திருந்திருக்கின்றன. இத்தாலிய சர்வாதிகாரியான சிஞ்ஞோர் முசோலினி மாணமான ஐந்தாம்நாள் இத்தாலிய யுத்தம் முடிவடைந்திருக்கிறது. இதற்கிடையில் ஜேர்மனியின் தலைப்பட்டணமாகிய பேர்ளின்நகரும் சென்ற 2-ந்திகதி பிற்பகல் 3 மணிக்கு வீழ்ச்சியடைந்துவிட்டது. அந்நகரைப் பாதுகாத்துநின்ற ஜேர்மன் சேனைகளின் பிரபல சேனாபதிகள் பலரும் கைதிகளானார்கள். ஹிற்லரின் பிரமாணிக்கமுள்ள கையாளாயும், பிரசாரமந்திரியாயும் இருந்துவந்த டக்ரர் கோயபெல்ஸ் தற்கொலைசெய்துவிட்டனர். ஹிற்லரின் பிறதேசகாரிய மந்திரியாய் விளங்கியிருந்த வொன் றிப்பென்றொப் என்பவரைப் புதியஜேர்மன் சர்வாதிகாரியான அட்மிறல் டோனிற்ஸ் என்பவர் பதவியிலிருந்தும் நீக்கிவிட்டு, இவரிடமாக வொன் குறொசிக் என்பவரை நியமித்திருக்கின்றார். ஜேர்மன் ஆகாயப்படை மந்திரியாயிருந்த மாஷல் கோயறிங் என்பவர் ஏலவே இருதயநோய்கண்டு தனது பதவியை இராசிநாமாச்செய்துவிட்டனர். மேற்குப்போர் அரங்கத்திலே ஜேர்மன் சேனைகளின் மாஜி பிரதம சேனாபதியாயிருந்த மாஷல் வொன் றனட்ஸ்ரெட்ற் என்பவரும் கைதியாயினர். ஹிற்லரும் பேர்ளின்நகரிலே ஓர் வீரனுக்குரிய மாணமடையவில்லையென்றும், அவர் தனது பிரசாரமந்திரி டக்றர் கோயபெல்சும், கிறெப்ஸ் எனும் நாஸிய ஜெனறலும் சமேதராய்த் தற்கொலை செய்தே தனதுஉயிரை மாய்த்துக்கொண்டாரென்றும் சோவியற் அறிக்கை தெரிவிக்கிறது. நாஸிய பெருந்தலைவர்களெல்லாம் மறைய, நாஸியகட்சியும் ஜேர்மனியில் மறைய, அதனால் ஜேர்மன்சேனைகள் விரைவிலே முற்றாகச் சரணடையுமென்று காத்திருக்கலாம். அப்போது வி. தினம் அதாவது வெற்றித்தினம்—அதிலும்விளக்கமாய் வி ஈ. தினம் அதாவது ஐரோப்பாவில் வெற்றித்தினம் வருவதாகும். இந்த மங்கல தினத்தையே இன்றைய உலகமுழுவதும் நிமிஷந்தோறும் எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றது. இன்று ஜேர்மனியில் இரு சர்வாதிகாரிகள். இவர்களில் ஒருவர் ஹிம்லர். இவரே ஆப்பதவிக்கு முன்தொட்டு ஆயத்தஞ்செய்துகொண்டுவந்தவர். இவர் ஜேர்மனியின் தோல்வியை ஒப்புக்கொண்டு ஐக்கியதேசங்களுடன் சமாதானஞ்செய்வதற்கான உடன்படிக்கைப் பேச்சுகளை நடத்திவருகின்றார். ஹிற்லரால் நியமனஞ்செய்யப்பெற்ற புதிய சர்வாதிகாரியான டோனிற்ஸ் என்பவரோ போர் தொடர்ந்து நடக்கவேண்டுமென்று நிற்கின்றார். அதனால் ஊர்இரண்டுபட்டவாறாய் ஜேர்மனியும் இருசர்வாதிகாரிகளினால் இரண்டுபட்டு நிற்கும்போது அதன் விழுகைக்கு அதிக காலம் செல்லமாட்டாதென்றே நம்பியிருக்கலாம்.

## சிஞ்ஞோர் முசோலினி

இத்தாலிய சர்வாதிகாரியாகக் கடந்த இருபத்துமூன்று வருடகாலமாய் விளங்கியிருந்தவரும், இன்றைய உலக மகாயுத்தத்தின் இரண்டாவது பெரிய குற்றவாளியாகக் கொள்ளப்பட்டு வந்தவருமான சிஞ்ஞோர் முசோலினி அவர்கள்வட இத்தாலியைச்சேர்ந்த கொமோ நகருக்கணித்தாய்ச் சென்ற 28-ந்திகதி சனிக்கிழமை இத்தாலிய தேசாபிமானப் படைவீரர்களிடம் கைதியாகிப் பத்துநிமிஷவிசாரணையின்பின் கொலைத்தண்டனை விதிக்கப்பெற்று அன்றுபிற்பகல் 4. 10 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டு மாணத்திரையில் மறையலாயினர். வாளெடுத்தவன் வாளாலே சாவான்எனும் சுலோகம் கடைசியாக இவர் மட்டிலும் நிறைவேறலாயிற்று. என்றாலும் உலகசரித்திரத்தில் இவரும் ஓர் உன்னத ஸ்தானத்தை வகிப்பார். தனது ஆதிக்கமும், வீரமுழக்கமும் உச்சநிலை எய்தியிருந்த காலத்திலே உயிர்நீத்திருப்பாராயின் இவரும் புகழுடம்பு நிறுவியிருப்பார். ஆனால், தனது ஈனந்த படுதோல்வியின் மத்தியில் இவர் மறைந்தமையானது, இவரது சீவிய நாடகத்தின் பிற்பாகத்தைப் பெரிதும் பங்கப்படுத்தி இகழ்ச்சிக்குரியவகையிலே அதற்கு முற்றுப்புள்ளி இட்டிருக்கிறது. இத்தாலிக்குப் பலவழியாலும் பேரையும், பிரஸ்தாபத்தையும், எத்தியோப்பியாவரையிலே பெரிய சக்கிராதிபத்தியத்தையும் உண்டுபண்ணிவைத்த முசோலினி கடைசியாக யுத்தத்திலே ஹிற்லருடன் சேரப்போய் அதன்பெருமையையும், பேரையும், சக்கிராதிபத்திய முழுவதையுமே இல்லாதொழியச் செய்துவிடலாயினர். என்றாலும் ஓர் வீரனென்றே அவரை உலகம் கொண்டாடுமெனலாம். இத்தாலியிலே 1920-ம்ஆண்டு இருந்த சீர்கேடான நிலைமையிலே முசோலினி வெளிகொண்டு அதிகாரம் வகித்திராவிடின் அஃது இற்றைக்குக் கால்நூற்றாண்டின் முன்னரே வெகுவாகப் பாழடைந்திருக்கும். ஓர் கொல்லனின் மகனாயிருந்தும் ஈற்றில் பெரியவோர் இராசதந்திரியாகச்சிறந்து இத்தாலிய மந்திரி சபையிலே ஒருகாலத்தில் பிரதம மந்திரிபதவி, பிறதேசகாரிய மந்திரிபதவி, உள்நாட்டு மந்திரிபதவி முதலாம் ஏழு மந்திரிபதவிகளை இவர் வகித்திருந்தார். பரிசுத்த ஸ்தானத்துக்கும், இத்தாலிய அரசாங்கத்துக்குமிடையே 1870-ம் ஆண்டு முதல் சுமார் அறுபதுவருடகாலமாய் இருந்துவந்த பெரும்பிணக்கைத்தீர்த்து லத்தறன் உடன்படிக்கையாலே இரண்டினையும் சமாதானப்படுத்திவைத்தபெருமை சிஞ்ஞோர் முசோலினிக்கே உரியதெனக. ஜேர்மனியிலே ஹிற்லரின் நாஸியஆட்சி தலையெடுத்த காலத்திலே முசோலினிக்கு அவருடையபோக்கு பிடிக்கவேயில்லை. சில சந்தர்ப்பங்களிலே அவரைக் கண்டித்துமிருக்கிறார். விசேஷமாய் ஜேர்மனியிலே ஹிற்லர் தனதுஎடுப்புக்கு இணங்காத கத்தோலிக்க திருச்சபையைச் சண்டவேகத்துடன் எதிர்த்து, அதனை நிர்மூலமாக்கிவிட முனைந்தபோது, முசோலினி இரண்டொரு தடவைகளிலே அவரைப் பலமாகக்கடிந்து, கடந்த இரண்டாயிர வருடங்களிலும் திருச்சபையை எதிர்த்தவர்கள் பட்டபாட்டையும், கெட்டகேட்டையும் எடுத்துக்காட்டி அவரை எச்சரித்திருக்கின்றார். பிரான்சு படுதோல்வியுற்றுப் புறங்காட்டியபோது, தவித்தமுயலை அடித்தவாறாய் முசோலினி அதனைப் பின்புறமாகத்தாக்கிய சதிமானம் அவருக்குப் பெரிய அவமானமாயிற்று. என்றாலும், இவ்விதம்அவர் தாக்கியிராவிடின் ஹிற்லர் அவரைச் சும்மாவிட்டிருப்பாரா? ஹிற்லர் ஆக்கிரமித்த பல நாடுகளின் நிர்ப்பாக்கியகதியே இத்தாலிக்கும் ஏற்பட்டிருக்குமன்றோ!

## ஹிற்லரும் மறைந்தார்

ஐரோப்பாவை மாத்திரமன்று, அகில முழுவதையுமே தனதுகாலின்கீழ் அடிப்படுத்திக் கட்டியாள வேண்டுமென்ற கர்வசிந்தைகொண்டு, உலகம் எக்காலத்துமே கண்டுகேட்டறியாத மகாபயங்கரமான இந்த யுத்தத்தைத்தொடக்கிக் கடந்த ஆறுவருடமாக உலகமுழுவதையுமே கலக்கிக் 'கல்லடி சிற்பன் போனவழி காடுமேடெல்லாம் தவிடுபொடி' என்றவாறாய் ஐரோப்பா முழுவதிலும் எண்ணிலடங்காத எத்தனையோ அழகான நாடுகள், நகரங்கள், கிராமங்கள், ஆலயங்கள், மாளிகைகள், கல்விச்சாலைகள், தொழிற்சாலைகள், வாசஸ்தலங்கள் ஆதியவற்றையெல்லாம் அந்தோ! பாழாக்கி, கோடிக்கணக்கான மக்களின் உயிரை யமனுக்கிரையாக்கி, உலகமுழுவதையும் இரத்தப்பிரவாகமும் இரத்தக்கண்ணீருமாக்கிவிட்ட மாபெரும் பாதகரும், இந்த யுத்தத்தின் முதலாம்நம்பர்க் குற்றவாளியும், ஜேர்மனியின் சர்வாதிகாரியுமாகிய ஹிற்லரும் கடைசியாகத் தனது அந்திய காலம்வந்து அவமிருத்தாயினர். அவரின் மாணத்தோடு உலகின் பெரிய சனசமூக விரோதி இறந்தார். பெரிய வேதவிரோதி மறைந்தார். பெரிய யூத விரோதி மடிந்தார். அவரால் ஜேர்மனி ஈடேறவுமில்லை. உலகம் ஈடேறவுமில்லை. அவரது நாஸிய இயக்கத்தாலும், நாஸிய அரசாட்சியாலும் உலகத்துக்குப் பொருள்அழிவும், உயிர் அழிவும், பஞ்சமும் படையும், கண்ணீரும் கம்பலையுமல்லாது —பொதுவிலே நாசமல்லாது ஒருசுகமுமே உண்டாகவில்லை. ஜேர்மனியை உலகமுழுவதுக்கும் தலைமையான ஓர் அதிகாரம் வகித்த நாடாக்கவேண்டுமென்று அவர் எடுத்த முயற்சியெல்லாம் அதனைத் தலைகீழாக வீழ்த்தியது. அதன் அபஜெயத்தின் மத்தியில், அழிவின் மத்தியில் அதைத் தவிக்கவிட்டுச் சென்றிருக்கிறார். அவரது வெற்றிமுழக்கங்கள் வீரகர்ச்சனைகள் எல்லாம் ஓடி மறைந்தன. ஆடியகூத்து அமர்ந்த தொருநாழிகையில் என்றவாறாய்க் கருமம்முடிந்தது. ஜேர்மனியிலும், தான் அடிப்படுத்திய பலநாடுகளிலும் கத்தோலிக்க திருச்சபையின் பெரிய விரோதியாயிருந்து, அதற்குப் பலவழியாலும் இடுக்கண்விளைத்து, அதனை ஒழித்துவிடுவான் முனைந்துநின்று மும்முரமான வேதப்போர்நடாத்திய ஹிற்லரும் மலையுடன்முட்டிய மண்ணாங்கட்டிபோன்று ஈற்றில் மாண்டுமடிந்தார். கடந்த இருபதுநூற்றாண்டுகளிலும் கிறீஸ்துவேதத்தை எதிர்த்து, இம்சித்து அதனைக் குழிதோண்டிப் புதைத்துவிடுவான் கங்கணங்கட்டிநின்றாரின் பிரலாபகதியே அவருக்குமாயிற்று. ஹிற்லர் மறைந்தார். கிறீஸ்துவேதமோ இன்னமும் நிறுவிநிற்கின்றது. நிற்க, ஹிற்லர் சென்ற 1-ந்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் இறந்ததாக ஜேர்மன் ஆகாயவசனி அறிவித்துள்ளது. அவர் பேர்ளின்நகரிலே படைமுகத்தில் இறந்தாலென்ன, பிறவிதத்தில் இறந்தாலென்ன இறந்தேபோயினர். வருகால சரித்திராசிரியர்கள் அவரது சரிதையை வரையுமிடத்து, பிற்கால சந்ததியார் அதனைப்படித்து வெகுவாகப் பிரமித்து, அவர்களும் அவரை ஓர் மகாவீரனென்றே சொல்வார்கள். ஹிற்லரும் தனது ஆட்சியினதும், வீரபராக்கிரமத்தினதும், வெற்றிகளினதும் உச்சநிலையிலே இறந்திருப்பாராயின் அவரும் பெரும்புகழ் நாட்டியிருப்பாரென்று சொல்லவேண்டியதில்லை.

## அறிவித்தல்

### ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்பு

கொலம்பகம் சஞ்சூசையப்பர் தாபனத்தில் ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்பு இம்மாதம் 1-ந்திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிவிட்டது. மேற்படிவகுப்புப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இன்னும் சொற்பகாலமே இருப்பதினாலும் இம்முறை எமது ஆசிரிய கலாசாலைக்கு முந்திய வருடத்திலும் கூடியதொகையான மாணவர் வேண்டியிருப்பதினாலும், பரீட்சைஎடுப்பதற்குத் தகுதிவாய்ந்த கத்தோலிக்க மாணவர் எல்லோரையும் அவர்களுக்கென்று நடத்தப்படும் இவ்வகுப்பிற் சேர்ந்து படிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வண. L A. சிங்கராயர் O. M. I.
தாபனத்தலைவர்

## தேவை

ஆசனக்கோவில் ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு மனேஜர் தேவை. மாசவேதனம் ரூபா 45/- ரூபா 500/- ரொக்கப்பிணை கட்டவேண்டும். நேரகாலத்துடன் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி

யாழ்ப்பாணம்
3-5-45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

அடைக்கலத்திருநாள்—கொழும்புத் துறைத் தாபனத்திலே அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாள் சென்ற 29-ந்திகதி ஞாயிறுவாரம் வழமைபோலப் பத்திச்சிறப்பாய்க் கொண்டாடப்பெற்றது. அன்றுகாலை கோவிலிலே சந்நியாசர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் பிறரும் திரளாகக் கூடியிருந்த சமூகத்திலே நம் மேற்றிராணியாண்டவர் திருநாட்பூசை நிறைவேற்றினர். அவ்வேளை மிகவண. விக்கார் ஜெனறல் சுவாமியார் அர்ச். சூசையப்பரும் ஆசிரியர்களும் என்பதுபற்றி அரியதோர் பிரசங்[கஞ்]செய்தனர். அன்று 10 மணிக்கு [ஆரம்]பமாகி நடந்தேறிய தாபன பழை[ய மா]ணவர் சங்கத்திலே வண. சுவாமி [ஞா]னப்பிரகாசர் அவர்கள் "கத்தோலிக்கர் தமிழுக்கு ஆற்றியதொண்டு" என்னும் விஷயமாய் பொருட்பொலிவுமிக்க ஓர் சொற்பொழிவாற்றினர். சாயந்தரம் பட்டினப்பகுதியிலிருந்து குருமாரும் விசுவாசிகளுமாகப் பெருந்திரளானோர் கூடியிருந்த சமூகத்திலே அதிவண. எவ். எம். விசியன்சுவாமியாரால் வேஸ்பர் பாடப்பட்டது. அதன்மேல் மணியோசை, செபமேவாசை, சங்கீதமேவாசைகள் மத்தியிலே மாதவவளனின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்து, திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்துடன் திருநாள் நிறைவெய்தியது.

இந்திய சிலேற்றுகள்—இந்தியாவிற் செய்த சிலேற்றுகளையும், சிலேற்பென்சில்களையும் வருகிற மார்கழிமாசம் 31-ந்திகதி வரையிலே எவ்வித தொகைக்கட்டுப்பாடுமில்லாது இலங்கைக்கு ஏற்றுமதிசெய்ய இந்திய அரசாங்கம் அனுமதித்திருக்கின்றது.

கைத்தொழில் மந்திரியார்—தொழில்-கைத்தொழில்-வர்த்தக மந்திரியாரான தி[ரு]. ஜி. சி. எஸ். கோறியா அவர்கள் கொப்பறுவுக்கு உயர்ந்தவிலைபெறுதற்கென்று மேலதிகாரிகளுடன் கலந்துபேசுமாறு நேற்று வியாழக்கிழமை இங்கிலாந்துக்குப் பிரயாணமாயிருக்கிறார். இவரிடமாக ஐக்றிங் மந்திரியாராய் அரசாங்கசபையிலே பண்டாரவளைப் பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. ஜே. ஜி. இராசகுலேந்திரன் தெரியப்பெற்றிருக்கின்றார்.

புத்தகநன்கொடை—யாழ்ப்பாணப்பட்டினசங்க தலைவரான திரு. சி. பொன்னம்பலம் அவர்கள் கிறவுண் பிரக்கிராசியாராயிருந்து காலஞ்சென்ற தமது தந்தையாரான ஏ. கதிரவேலு ஜே.பி., யு. எம். அவர்களுக்குச் சொந்தமான ஒருதொகையான புத்தகங்களைப் பட்டினசங்க புத்தகாலயத்துக்கு வெகுமதிபண்ணியிருக்கின்றார். இவைகள் அரசியல், பொருளாதார, சமயசம்பந்தமான புத்தகங்களாகும். இவற்றிலே சில மிகவும் அருமையானவைகளாம்.

புத்தூர் நிலாவரை—புத்தூரிலே நிலாவரை வற்றாஊற்றுக் கிணற்றிலிருந்து நீர்ப்பாய்ச்சுவதுபற்றிய ஆரம்பவேலை நடைபெற்றுவருகின்றது. நிமிஷம் ஒன்றுக்கு 550 கலன் தண்ணீர் இறைக்கக் கூடிய யந்திரங்கள் பாவிக்கப்படவிருக்கின்றன. அவைகள்பூட்டி ஒருமாசமட்டும் இறைத்துப் பார்க்கப்படுமாம். அப்பொழுது நிபுணர்கள் தண்ணீரைப் பரிசோதிப்பர். இறைக்கும்போது பக்கத்திலுள்ள கிணறுகள் வற்றுகின்றனவா என்பதும், கீரிமலைக் குளத்துக்குவரும் நீர்ஊற்றுக் குறைகிறதா என்பதும், ஊரெழுவிலுள்ள பொக்கணை வற்றுகிறதா என்பதும் கவனிக்கப்படுமாம். இறைக்கும்போது நிலாவரை வற்றிக் கெதியாக ஊறினால் காரியம் நயப்படும்.

லோறி விபத்து—அனுராசபுரத்திலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள பெரியகுளம் எனுமிடத்திலே சென்ற ஞாயிற்றுக்கிழமை லொறிஒன்று விபத்துக்குள்ளாய் அதிலே சென்றவர்களில் மூன்று மனிதரும், ஓர்மனுஷியும் அவ்விடத்திலேயேஇறக்க, வேறு 21 பேர் காயமடைந்து அனுராசபுர ஆஸ்பத்திரி கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்கள். இந்தலொறி கடற்படைக்குரியதாம். வெட்டுமரங்களையும், யாத்திரிகளையும் இது ஏற்றிச்சென்றபோது விபத்து ஏற்பட்டது.

இரு உத்தியோக பதவிகள்—ஆசிரிய கலாசாலைகளையும், மத்திய கலாசாலைகளையும் மேல்விசாரணை செய்யவென்று இருஉத்தியோகஸ்தர்களை நியமிக்கக் கல்வி நிர்வாக மந்திரிசபை தீர்மானித்திருக்கிறது. சமீபகாலத்திலே இன்னும் ஐந்து ஆசிரியகலாசாலைகளை ஸ்தாபிக்க ஏலவே தீர்மானமாய் இருக்கிறது. தற்போதுள்ள மத்திய கலாசாலைகள் 23. மேலும் 25 மத்திய கலாசாலைகளை ஸ்தாபிக்க ஆயத்தம் நடந்துவருகிறது.

ஆகாயப்பிரயாணசேவை—கராச்சிக்கும் கொழும்புக்குமிடையே ரற்றா கம்பெனியாரின் ஆகாயப்பிரயாணசேவை இந்த வைகாசிமாசம் 1-ந்திகதி தொடக்கம் தீவிரகெதியிலே நடத்தப்படுகின்றது. அதாவது காலை 5. 30 மணிக்குக் கராச்சியிலிருந்து பிரயாணப்படும் விமானங்கள் அன்றுபிற்பகல் 4 மணிக்குக் கொழும்புவந்து சேருகின்றன. இருநகர்களுக்குமிடைப்பட்ட 1,300 மைல் பிரயாணதூரத்தையும் 10 மணி நேரத்துள் அவைகள் தாண்டிவருகின்றன.

புதியவருட சேலவு—வருகிற ஐப்பசிமாசம் ஆரம்பமாகும் புதிய அரசிறைவருடத்தின் செலவுமதிப்புகளை மந்திரிமார் ஏலவே சமர்ப்பித்திருக்கின்றார்கள். வித்தியாபகுதி ஒன்றின் செலவு நீங்கலாக மற்றப்படி ஏனைய அரசாங்க பகுதிகளின் செலவுகள் நிகழும் அரசிறைவருடத்தின் செலவுகளை ஏறக்குறைய ஒத்திருக்குமாம். பொதுசன பாதுகாப்புப்பகுதி நீக்கப்பட்டுவிட்டமையால் அதற்கேற்பட்டுவந்த பெருஞ்செலவு இனி ஒழிந்துவிடும்.

## பழக்கமும் பரவணியும்

* 'ஈழகேசரி'யிலே கடைசியாகக் "கொண்டோடி" என்ற அலங்காரமான பெயருடன் ஒருவர்வெளிகொண்டு பெரிய ஆரவாரம் செய்யத் தொடங்கியிருக்கிறாராம்.

* இந்தக் "கொண்டோடி" என்றவர் "கர்ணபரம்பரை" என்ற தலையங்கத்துடன் தலைகாட்டியிருப்பதும் ஒருநல்ல புதினமாம். இவரது 'கொண்டோடி'க் குணம் கர்ணபரம்பரையில்தான் இவருக்கு வந்ததோஎன்றும் இந்தவேளை சிந்திக்கவேண்டியிருக்கிறதாம்.

* "கிறீஸ்த கல்லூரிகளுக்குச் சத்திரவைத்தியம் செய்யப்போகிறாராம் கன்னங்கரா" என்று இந்தக் கொண்டோடி ஓர் புதினம் கொண்டுவந்திருக்கிறாராம். இப்படியான புதினங்களைக் கொண்டோடித் திரிவதென்றால், இந்தக் கொண்டோடிக்கும் பெரிய கொண்டாட்டமாம்.

* கிறீஸ்தகல்லூரிகளுக்குக் "கன்னங்கரேல்" சத்திரவைத்தியம் செய்யுமுன் அவற்றிற்குத் தான் சவரவைத்தியம் செய்துவிட்டாலோ என்றும் கொண்டோடி சிந்திக்கிறாராம்.

* "கன்னங்கராவுக்கு வைத்தியம் தெரியா"திருக்க, அவர் கிறீஸ்த கல்லூரிகளுக்குச் சத்திரவைத்தியம் செய்வது எப்படியென்று பிறகுதான் கொண்டோடி யோசிக்கிறாராம்.

* கிறீஸ்தவர்கள் என்றால் கொண்டோடிக்குத் தின்னக்குடிக்கத் தெளிவெண்ணெய்போல் அவ்வளவு தித்திப்பு உண்டாகிவிடுகிறதாம்.

* ஜி.ஜி. அவர்களுடன் கொண்டோடியும் குரங்குச்சேட்டை நடத்துவதைக் கவனிக்கும்போது, இதுவும் அவருக்குக் கர்ணபரம்பரையில் உள்ளதோவென்றே யோசிக்கவேண்டியிருக்கிறதாம்.

* ஜீ. ஜீ. அவர்களுக்கு "புங்குடுதீவில் மலர்மாலைகளினால் உற்சாகமான வரவேற்பு. தெருவெல்லாம் தோரணங்களும் பந்தர்களும் காணப்பட்டன" என்று கொண்டோடி செய்திகொண்டோடுகிறாராம்.

* மலர்மாலைகளின் "சுமையைத்தாங்க முடியாத நிலைமையில் ஜீ. ஜீ. இருந்தாராம்" என்று கொண்டோடி [illegible] முடியாது [illegible] றாராம்.

* புங்குடுதீவிலே மலர்மாலைகளினால் தனக்கும் ஓர் உற்சாகமான வரவேற்பு அளித்தாலோவென்றுகொண்டோடிநினைக்கிறாராக்கும். அப்படியானால், மலர்மாலைகளை அவரே போட்டுக்கொண்டுபோக வேண்டியிருக்குமாம்.

* "ஜீ. ஜீ. யும் அவரது சிலசகாக்களும் இங்கிலாந்துக்குப் பறப்பார்" என்று கொண்டோடி வரைந்து செட்டைகட்டிப் பறக்கின்றாராம்.

* தன்னைப் பத்திரிகைகள் ஆதரிப்பதில்லையென்று கல்விமந்திரியார் திரு. கன்னங்கரா குறைகூறுகின்றாராம். அவரும் பத்திரிகைகளை ஆதரியாமைதான் அதற்குக் காரணமாய் இருக்கலாமாம்.

* எந்தப் பத்திரிகைகள்தான் அவரை ஆதரியாமல் விட்டபோதிலும் "ஈழகேசரியின் மனப்பூர்வமான ஒத்துழைப்புக் கிடைக்குமென்பதில் அவர் ஐயுறவேண்டியதில்லையாம்".

* 'ஈழகேசரி'யின் மனப்பூர்வமான ஒத்துழைப்புக் கிடைக்கவேண்டுமானால், அவர் இலங்கையின் தேசியக்கொள்கையையும், சமயகல்விமுறையையும் மாற்றாமல் இருக்கவேண்டுமாம்.

* 'ஈழகேசரி'யின் மனப்பூர்வமான ஒத்துழைப்புக் கிடைக்கும்போது திரு. கன்னங்கரா என்னவிதமான யோசனையுமே இனிப் பண்ணவேண்டியதில்லையாம் அதனால் எங்களுக்கென்னடி பெண்... ஈழகேசரி இருக்கையிலேயாம்.

* கொண்டோடியின் தோற்றம் மறுமுறை[யு]ம் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறதா[ம்]. ஆமாம் நாய்க்கு வேஷம்போட்டால் [ஊ]ளைத்தேதீரவேண்டுமாம்.

* 'ஈழகேசரி'யிலே அதன் கொழும்புநிருபர் மண்டுகேங்களையும் கொண்டுவந்து அவைகள் ஓயாமல் வாயால் கத்திக்கத்திக்கொண்டிருக்க விட்டிருப்பதும் ஒரு நல்ல புதினமாகுமாம்.

* ஆட்கள் ஓயாமல்வாயால் கத்தியே கத்தி ஒருபலனும்வராது சலித்துப்போய் விட்டார்களாக்கும். அதனால்இப்போதுதவளைகளைக் கொண்டுவந்து சும்மா கத்திக்கொண்டிருக்கட்டுமென்று விட்டிருக்கிறார்களாக்கும்

* மண்டுகேங்கள் ஒருபால் கத்திக்கொண்டிருக்க, அவற்றின் இராகத்துக்கிணங்க தலையையும் வாலையும் திருப்பிக்காட்டும் விலாங்கின் நாடகமொன்றையும் 'ஈழகேசரி'யிலே அதன் கொழும்புநிருபர் நடத்தத் தொடங்கியிருக்கிறாராம்.

* 'ஈழகேசரி'க் கொழும்புநிருபர் தன்னையும் அம்பலத்துக்குக் கொண்டுவந்துவிடப் பாடுபடுகிறாராம். ஆனால், அந்த அம்பலமென்ற இளஞ்சிங்கத்தின்முன் உந்த மண்டுகேங்கள், விலாங்குகள்தானா நின்றுபிடிக்கப்போவனவாம்.

—காற்றாடி

## மரணசங்கதி

மாதகலிலே உயர்வேளாண் மரபினராய், வேந்தர்கோன் முதலியாரின் வழித்தோன்றலாய், அவ்வூர் அர்ச். அந்தோனியார்கோவில் மூப்பராய், பிரபல விதானையாராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற திரு. ம. அந்தோனிப்பிள்ளை அவர்களின் பாரியாரான ஆனசிப்பிள்ளை என்பவ விருத்தாப்பிய நோய்கண்டுவருந்தி, அந்திய தேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன் பெற்றுச் சென்ற சித்திரைமாசம் 23-ந்திகதி திங்கட்கிழமைஇரவு காலஞ்செல்லலாயினு. மரிக்கும்போது இவவுக்குவயசு 88. இவ தேவசிந்தை, தருமசிந்தை, பரோபகாரசிந்தையுள்ள ஓர் உத்தமி. குடும்ப தேவாசீர்வாதமும், சந்தானப்பெருக்கமும் பெற்றிருந்தவ. பல புத்திரர், புத்திரிகள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகளைக் கண்டுகளிக்கும் பாக்கியம்பெற்றவ. தலைமன்னார்க் கட்டளைக்குரவரான வண. எஸ். பி. அல்பிறெட் சுவாமியாரும், திரு. மாட்டீன் வேந்தர்கோனின் புதல்வராய் மலாய்நாட்டிலே திருத்தொண்டாற்றி வருகிறவரான வண. டோமினிக் அலோஷியஸ் வேந்தர்கோன் சுவாமியாரும் இவவின் பௌத்திரர்கள். மறுநாட் சாயந்தரம் பலவூர்களிலுமிருந்து பெருந்தொகையான இனசனர் வந்துகூடிய சமூகத்திலே இவவுடைய பிரேதமானது வேதாசார, தேசாசார சிறப்புகளுடன் வண. ஜே. எவ். சேவியர் சுவாமியார் துக்கசங்கிதம்பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க பூமதானம் செய்யப்படலாயிற்று. இவவின் [illegible] அன்புறும் சகலரோடும் [illegible] அனுதாபப்படுகின்றேன்.

R. I. P. (கடிதர்)

அன்பாய்ச் சோட்டிப் போஷித்து
வளர்த்த அருமைத் தந்தையாராகும்

**ஸ்ரீ பேதுருப்பிள்ளை கிறிஸ்தோப்பர்**
அவர்களின்
**1-ம்வருட**
**மரண ஞாபகம்**

பிறப்பு **10-7-1876**
இறப்பு **3-5-1944**

எங்களை விட்டுப்பிரிந்து இற்றைக்கு
ஓராண்டு பூர்த்தியாயிற்று
ஐயோ! நாங்கள் உம்மை இழந்து
விட்டோம்.
உதிரஞ்சிந்தும் எங்கள் இதயகமலங்கள்
மாத்திரமே
அத்துணை துயரத்துடன் இதைச்
சொல்லக்கூடும்.

எங்களை விட்டுப் பிரிந்தீரோஐயோ!
எவ்விதம் எம்மை நீர்பிரிந்தீர்
அருமை நேசத்தந்தாய், உமது சிந்தை
எங்களியத்தில்என்றும்இருக்கும்
எங்கள் சீவபரியந்தம் உம்மை நாங்கள்
மறவோம்
நீர் துயிலும் வான்வீட்டை எங்கள்
இதயத்துள்வைத்துப் பூசிப்போம்

[துயரப்படும் அவருடைய பிள்ளைகளால் கூறப்பட்டது]

யாழ்ப்பாணம்
1945 வைகாசி 3

—:o:—

### துக்கப் பாடற்பூசை

மரித்துப்போன ஸ்ரீ பேதுருப்பிள்ளை கிறிஸ்தோப்பருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக வருகிற 5-ந்திகதி சனிக்கிழமைகாலை 6. 45 மணிக்கு அடைக்கலமாதாவின் கோவிலிலே ஒரு துக்கப் பாடற்பூசை சொல்லப்படும்.

## புத்தக அறிவித்தல்

| | விலை சதம் | தபாற்கூலி சதம் |
|---|---|---|
| அர்ச். தொம்மை அப்போஸ்தலர் அம்மானை | 25 | 6 |
| அங்கீகரிக்கப்பட்ட ஐந்து பிரார்த்தனைகள் | 15 | 6 |
| அர்ச். அந்தோனியார்தோத்திரப்பாமாலை (பல நவீன மெட்டுகளடங்கியது | 10 | 3 |
| கொமிக்—பபூண்—தீண்டாமைப் பாட்டுகள் ஒரு டசின் பிரதிகள் | 25 | 6 |

சொற்பபிரதிகளேகைவசமிருக்கின்றன. தேவையானோர் பின்வரும் விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

விலாசம்:—

எஸ். எம். இன்னாசிமுத்து
மாஜி உபதேசியார்,
நெம். 6. சவிரிமுத்துமுதலியார்றோட்டு
யாழ்ப்பாணம்.




### அர்ச். பிரான்சீஸ்கு சவேரியார்
### தருமக்கோணம்

கேட்டநன்மைகள் அநுகூலமானதினால்
அனுப்பப்பட்ட காணிக்கைகள்

| | ரூ.-ச |
|---|---|
| V. L. Fernando & Co. | 1-00 |
| பெயர்போட விரும்பாதவர் | 1-00 |
| R. X. தங்கராஜ் | 1-00 |
| எஸ். ஞானப்பிரகாசம், மன்னார் | 1-00 |
| M. பாக்கியநாதர் ஆசிரியர் | 0-50 |
| பேதுருப்பிள்ளை கபிரியேற்பிள்ளை | 1-00 |

அர்ச். சவேரியாரின் நாமத்தால் அனுப்பும் தருமங்களை பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

THE DIRECTOR,
St. Vincent De Paul
Society,
MANNAR.

சேன் வின்சேன்ற் டீ போல்
சபைத் தலைவர்
மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலுவைவீரர் கோணம்




### சிலுவைவீரரும் தேவதாயாரும்

சிலுவைவீரர் நாளாந்தம் மூன்று பிரிய தத்தமந்திரம் சொல்லவேண்டியதேன்? என்ற வினவைக் கேட்டதும் சில்வை வீரர் யாபேரும் ஒரேதொனியாய் "தேவ தாயாரின் மாசில்லாத இருதயத்தின் வழியாய் யேசுவின் திருஇருதய அரசாட்சி பரம்பும்படியாகத்தான்" என்று மறுமொழி கூறிவிடுவார்கள். அவர்களது மறுமொழியிலிருந்தே தேவதாயாரின் மாசில்லாத இருதயம் தங்களது சிறியஅப்போஸ்தலத்தொண்டிற்குச்செய்யும் உதவியை அறிந்துகொள்வார்கள். திருஇருதயநாதர் தமது பரலோக பொக்கிஷங்களையெல்லாம் தமது திருத்தாயார்வசம் கொடுத்து அவர் விரும்பியபடியே தமது மக்களுக்குப் பகிர்ந்துகொடுக்கும்படி விட்டிருக்கிறார். தேவதாயார்மேல் யார் யார் பிள்ளைக்குரிய நேசம்வைத்து அவரைவாழ்த்தி வணங்குகிறார்களோ அவர்களே அத்தாயாரிடமிருந்து ஏராளமான வரங்களைப் பெற்றுக்கொள்வார்கள். ஆதலால் சிறிய வீரர்களே! நீங்களும் மற்றோரும் மோட்சநன்மைகளை ஏராளமாகப்பெறவேண்டுமானால் அத்திருத்தாயார்மேல் அன்புகொள்ளுங்கள். அவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இம்மாதத்தை விசேஷவிதமாய்க் கொண்டாடுங்கள். இம்மாதத்தைப் பத்திச்சிறப்பாய் வீரர்கள்கொண்டாடக் காரியஸ்தர்கள் மிகுந்த கரிசனையெடுப்பார்களென்று நம்புகின்றோம்.

### மன்னார், சற்பிரசாத சமாகமமும் சிலுவைவீரரும்

சென்றமாதம் 22-ந்திகதி மன்னாரில் நடந்தேறிய சற்பிரசாத சமாகமத் திவ்விய நற்கருணைப் பெரிய சுற்றுப்பிரகாரத்தில் அப்பகுதியிலிருந்து 700-க்கு மேற்பட்ட சிலுவைவீரர்கள் பங்குபற்றினார்களென்று கேள்விப்படுவது எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. ஒவ்வொரு வீரரும் தங்கள் தங்கள் சின்னங்களை அணிந்துகொண்டு தங்கள் ஆசிரியர்களது கண்காணிப்பில் திவ்விய சற்பிரசாதநாதரோடு பவனிபோனார்கள். குறிக்கப்பட்டநேரம் வந்ததும் தங்களது வாக்குத்தத்தத்தை மீண்டும்புதுப்பித்துத் திவ்விய போசனத்தை அடிக்கடி அருந்துவோம் என்றும், திருஇருதயம் யாவராலும் அறியப்படவும் நேசிக்கப்படவும் எங்களாலானதெல்லாம் செய்வோமென்றும் பிரதிக்கினை செய்துகொண்டார்கள்.

**கவனிப்பு:**—ஒவ்வொரு வீரர்களுக்கும் தாங்கள் சிலுவைப்படையில்சேர்ந்ததற்கு அத்தாட்சியாகக் கொடுக்கப்பட்ட பத்திரத்தில், தங்கள் பாதுகாவலாளியாகிய அர்ச். மாகிறேற் மேரி அலக்கோக் அம்மாளின் பிராஞ்சிய பரலெமோனியாவிலுள்ள ஆலய அடுத்தாரில் ஒவ்வொருவரது நாமமும் வைக்கப்படுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பிராஞ்சில் யுத்தந்தொடங்கியதுமுதல் இன்றுவரை அந்நாமங்கள் அனுப்பப்படவில்லை. ஆனால் இப்போது பேர்வழிகள் அடங்கிய ஐந்து பெரிய கொப்பிகளை அனுப்பியிருக்கிறோம். அத்துடன் எங்கள் வந்தனைக்குரிய மேற்றிராணியாண்டவரவர்கள், எங்கள் பாதுகாவலாளி பூலோகத்தில் சீவித்தபோது வசித்ததும், இப்போதும் அவவது பூசித சரீரம் வைத்துக் காப்பாற்றப்படுவதுமாகிய பரலிமோனியல்மடத்துச் சிரேஷ்ட தாயாருக்குச் சிலுவைவீரர்கள் யாபேருக்காகவும் அங்குள்ள கன்னியர்கள் எல்லாரும் மன்றாடும்படிகேட்டு ஒருகடிதமும் வரைந்தனுப்பியிருக்கிறார்கள். அதனால் அங்கு எங்கள் எல்லோருக்காகவும் நாளாந்தம் செபவேண்டுதல்கள் ஒப்புக்கொடுக்கப்படுமென்று நம்பியிருக்கலாம்.

வேறுவிஷயங்கள் இடமின்மையால் மறுமுறை வெளிவரும்.

இ. கு. வி.

திரு இருதய கருமசாலை
மேற்றிராணியார்மாளிகை,
யாழ்ப்பாணம்

## நன்மரணயத்த சபை

அடைக்கலப்பிதாவாகிய அர்ச்.சூசைமாமுனிவரது அடைக்கலநிழலில் அமர்ந்துள்ளதாகிய யாழ்ப்பாண நன்மரணயத்தசபையின் 39-வது அறிக்கை வருமாறு: இடையறாத தேவபராமரிக்கையாலும், அர்ச். சூசையப்பரின் தவறாத அடைக்கலத்தினாலும் கடந்தவருடமும் எமது நன்மரணயத்தசபையானது மிகுசித்திகரமாய் நடைபெறலாயிற்று.

**அங்கத்தவர்கள்:**—தற்போது எமது சபையிலே 39 ஆடவர்களும், 138 பெண்களுமாக 177 காரிய அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். மகிமை அங்கத்தவர்கள் இருவர். ஆனால், அங்கத்தவர்கள் தொகை கடந்தவருடத்திலே 17 பேரால் குறைந்துபோயிற்று. இதற்குக்காரணம் போதியளவு புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்படாமையே. மூப்புமார், ஆலோசனைகாரர், பகுதிமுதலாளிமார் ஆதியோர் கூடிய சிரத்தை எடுத்து இக்குறையை நிவிர்த்திசெய்வார்களாக.

**மாதாந்த கூட்டங்கள்:**—கடந்தவருடத்திலே ஆடவர்களுக்குப் பத்தும், பெண்களுக்குப் பத்துமாக 20 மாதாந்த கூட்டங்கள் நிகழ்ந்தன. அவற்றிலே சராசரி வரவு ஆடவர்கள் 28, பெண்கள் 67. இத்தொகை முந்தியவருடத்திலும் சற்றுக் கூடுதலாயிருக்கிறது.

**மாணித்த அங்கத்தவர்கள்:**- சென்றவருடத்திலே 13 அங்கத்தவர்கள் மறுமைச் சம்பாவனைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் நாமங்கள் வருமாறு: **ஆண்கள்:** பே. கிறிஸ்தோப்பர், அ. இன்னாசிப்பிள்ளை, பி. சுவாம்பிள்ளை. **பெண்கள்:** ஜேற்றூட் மிக்கேற்பிள்ளை, சிசிலியா தானியேல், எலிசபேத் கிறகோரி, சிசிலியா யாக்கோப்பு, கிறிஸ்தீனாசின்னத்தம்பி, அன்னம்மா சந்தியாப்பிள்ளை, சிசிலியா யோண்பிள்ளை, வயித்தியானா அந்தோனிப்பிள்ளை, எலிசபேத் தியோப்பிலஸ், மரியைப்பிள்ளை மனுவேற்பிள்ளை ஆகியவர்களாம். இவர்களுடன் எமது பரலோக கூட்டத்திலே 76 ஆடவர்களும், 160 பெண்களுமாக 236 பேர் இருந்துவருகிறார்கள்.

**ஆத்தும இளைப்பாற்றிப் பூசைகள்:**—கடந்தவருடம் கார்த்திகை மாசத்திலே திவ்வியபூசைகள் செய்விக்கவசதிப்படாது போனமை வருந்தத்தக்கதே. ஆயினும் வழமைப்படி மாதமுடிவிலே ஓர் பாடற்பூசை செய்விக்கப்பட்டது. இதுதவிர மரணித்த அங்கத்தவர்களுக்காக உடன் பூசைகளும், பிரேதசேமஉபகரிப்புப்பணம் வேண்டாதவர்களுக்காக அப்பணங்கொண்டு பூசைகளும் செய்விக்கப்பட்டன. கடந்தவருடத்திலே பெரும்பாலும் இந்த உபகரிப்புப்பணம் பூசைக்காகவே செலவளிக்க விடப்பட்டமை பாராட்டத்தக்கது

**அந்தியவேளைச் சந்திப்புகளும் பிரேத சேமங்களும்:**—நோய்வாய்ப்பட்டுள்ள அங்கத்தவர்களைத் தரிசித்து, அவர்களுக்கு ஆறுதல்புரிவதும், அவசியம்காணும்போது அவர்கள் கடைசித் தேவதிரவியானுமானங்களைப் பெறச்செய்வதும் எமது அங்கத்தவர்களின் பாரமான ஒரு கடமையாகும். இக்கடமையை நிறைவேற்றுவதில் அவர்கள் மிகுந்த உதாரத்துவம் காண்பிக்கிறார்கள். பிரேதசேமங்களைப்பற்றிக்கூறுகையில் சிலகாலமாக அங்கத்தவர்களின் ஊக்கம் தளர்வடைந்துவருவதை விசனத்துடன் குறிப்பிடவேண்டியிருக்கிறது. வருகாலத்தில் இக்குறை நிவிர்த்தியாக்கப்படுமென நம்பியிருக்கிறோம்.

**முடிவுரை:**—அயராஊக்கத்துடன் எம்மைக் கண்காணித்துவருகின்ற எமது ஞானவிசாரணைத் தலைவருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இன்னும் எமது கூட்டநலனுக்காகத் தொண்டாற்றிவருகின்ற மூப்புமார், கட்டளைகாரருக்கும், எமது உபகாரிகள், சிநேகிதர் ஆதியோருக்கும் எம் இருதயபூர்வமான நன்றியைச் சமர்ப்பித்து யாவரையும் சஞ்சூசைமாதவரது பூங்கொடிநிழலில் ஒப்படைத்து இவ்வறிக்கையை முடிக்கின்றோம்.

**1944-ம்ஆண்டு வைகாசி தொடக்கம் 1945-ம்ஆண்டு சித்திரை ஈறாகவுள்ள 12 மாசங்களினதும் வரவு செலவுக் கணக்கு**

| வரவு விபரம் | ரூ.—ச. |
|---|---|
| முன்கையிருப்பு | 130-25 |
| கடன்நிலுவை இருப்பு | 40-00 |
| பொதுக்கூட்ட வரவு | 28-05 |
| ஆண்கள் கூட்டவரவு | 26-60 |
| பெண்கள் கூட்டவரவு | 106-05 |
| மொத்தம் | 330-95 |

| செலவுவிபரம் | ரூ. ச. |
|---|---|
| மரணித்த அங்கத்தவர்களுக்காசப் பூசைசெய்விக்க | 26-00 |
| நித்தியபூசைக்காக | 32-50 |
| பிரேதசேம உபகரிப்பு | 120-00 |
| தருமம் | 6-35 |
| கார்த்திகைமாதம் பாடற்பூசை | 16-00 |
| அ. சூ. வணக்கமாசமும் திருநாட் பூசையும் | 19-50 |
| சில்லறைச்செலவு | 2-88 |
| சபைஅலுவல் பார்க்க | 30-00 |
| கடனுகக்கொடுபட்டது | 40-00 |
| செலவு மொத்தம் | 293-23 |
| தற்போது கையிருப்பு | 37-72 |
| மொத்தம் | 330-95 |


# விற்றோ

சுகந்தரும் மதுரபானமேயன்றி அது ஓர் பரீட்சார்த்த பானமன்று.

சரீர ஆரோக்கியத்தை அளிக்கக்கூடியனவும் மனதுக்குவந்தனவுமான பொருட்களைக்கொண்டு சாஸ்திரமுறையாகத் தயாரிக்கப்பெற்றிருக்கின்றது.

இலேசான பானவகைகளை விரும்புவோர் விற்றோவையல்லாமல் வேறு பானவகையைக் காணமுடியாது

"விற்றோ" செய்கைக் கம்பெனி


தந்தி:— "விற்றோ" டெஹிவலை

சில்லறை விற்பனையாளர்:
எல். எஸ். இராசநாயகம்
13, சவிரிமுத்து முதலியார் றேட்டு
யாழ்ப்பாணம்



# இருட்டுச் சந்தையை அகற்ற

பிறிமியர் ஸ்டோரை நாடுங்கள்



விலைக்கட்டுப்பாட்டுச் சாமான்கள் கட்டுப்பாட்டு விலைக்கும் மற்றும் சாமான்கள் மட்டானவிலைக்கும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதார்த்தமான பண்டகசாலை.

பிறிமியர் ஸ்டோர்ஸ்
பெரியதெரு, யாழ்ப்பாணம்

PREMIER STORES
Main Street, JAFFNA.



## நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்

நீங்கள் தேகாரோக்கியமும் தீர்க்காயுளும்பெற்று வாழவிரும்புகிறீர்களா? உங்களுக்கு எல்லாப்பாக்கியங்களிலும் சிறந்த பிள்ளைப்பாக்கியம் வேண்டுமா? உங்கள் புத்திரர் புத்திரிகளுக்கு உகந்த ஓர் சிறுபிள்ளை வைத்தியரை அறிய ஆசிக்கிறீர்களா? யாழ்ப்பாணம் பெரியதெரு, நம். 160, சில்லாலை மூத்து வைத்தியசாலையை நாடுங்கள். அங்கே எவர் எந்நோயால் வருந்துகிறாரோ அவர் அந்நோயைத்தீர்க்கும் ஔஷதத்தைப் பெற்றுக்கொள்வர்.

இங்ஙனம்,
மு. இ. பிரான்சீஸ்பிள்ளை உபாத்தியாயர்
தெல்லிப்பளை.


## லண்டன்நகரும் வெடிகுண்டுகளும்

ஐந்துவருடகாலமாக ஜேர்மன் விமானங்கள் பொழிந்த வெடிகுண்டுகளினதும், மற்றும் பறக்கும் குண்டுகளினதும், கடைசியாகத்தீரப்பட்ட ஆகாயவாணக் குண்டுகளினதும் கெடுகளிலிருந்து லண்டன்நகர் இப்போது விடுதலையடைந்துவிட்டது. அதனால் லண்டன்நகர்வாசிகள் ஆகாயத்திலிருந்து யாதும் எச்சரிக்கை இல்லாமலே வந்துவிழுந்து சடுதிமரணத்தை உண்டுபண்ணும் இக்குண்டுகளின் அச்சமின்றி வீதிகளில் நடந்துலாவக்கூடியவர்களாயும், தங்கள் சொந்தப்படுக்கைகளிலே உறங்கக்கூடியவர்களாயும் இருக்கின்றார்கள். அங்கு நியூகுறோஸ் எனுமிடத்திலே சென்ற கார்த்திகையில் ஆகாயவாணக் குண்டொன்றால் 167 பேரும், சித்திரைமாசத்தில் மற்றோர் ஆகாயவாணக் குண்டால் 133 பேரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்

Printed and published for the Proprietor by Bastiampillai Santiagoepillai residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises Main Street Jaffna on Friday 4, May 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org